# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**விசாரணை நாள் 10.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 3567-E-2024**

திரு து.இன்பமணி .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
கண்காணிப்பாளர்,
நிலச் சீர்திருத்தத் துறை,,
சேப்பாக்கம், சென்னை - 600 005

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு து.இன்பமணி ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | சென்னை சேப்பாக்கம், நிலச் சீர்திருத்த துறையின் உதவி ஆணையர் திரு பி.சுப்புராஜ் ,ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 23.10.2023 |
| **கோரிய தகவல்**:-<br>வேளச்சேரியில் உள்ள தங்களது குடும்ப சொத்துக்குரிய SLR நகலை தான் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ததாகவும், ஆனால் அது முழுமையாக இல்லை என்றும் ஆகவே தனக்கு முழுமையான SLR நகலை வழங்க வேண்டுமெனவும் கோரியுள்ளார். | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்படவில்லை |
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 24.11.2023 |
| சட்டப்பிரிவு 18(1)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 14.03.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் சென்னை சேப்பாக்கம், நிலச் சீர்திருத்த ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவிற்கும், சட்டப் பிரிவு 19(1)-ன் கீழ் அனுப்பிய முதலாம் மேல்முறையீட்டு மனுவிற்கும், தனக்கு பதில் ஏதும் வழங்கப்படவில்லையென தெரிவித்து, 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளதை தொடர்ந்து, இன்று இந்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் தங்கள் அலுவலகம் தொடர்புடையது அல்ல என்பதால், அம்மனு தக்க மேல் நடவடிக்கைக்காக நிலஅளவை மற்றும் நிலவரிதிட்ட இயக்குநர் அலுவலகத்திற்கு 25.06.2026 அன்று அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்தபோது, மனுதாரர் 23.10.2023 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக மனுதாரருக்கு தகவல் வழங்க நிலச் சீர்திருத்த ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர், இதுவரையில் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதும், 25.06.2026 அன்றுதான் இது குறித்து, நிலஅளவை மற்றும் நிலவரிதிட்ட இயக்குநர் அலுவலகத்திற்கு தக்க நடவடிக்கைகாக அனுப்பப்பட்டுளளது என்பதும் தெரிய வருகிறது.

5) விசாரணையின் முடிவில், ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது:-

i. **மனுதாரர் 23.10.2023 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக இது நாள் வரையில், எவ்வித தகவலும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. மனுதாரர் கோரிய தகவல்கள் நிலஅளவை மற்றும் நிலவரிதிட்ட இயக்குநர் அலுவலகம் சம்மந்தப்பட்டது என்பதால், மனுதாரரின் மனு, மேற்படி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர் தனது 6(1) மனுவில் கோரிய தகவலை, நிலச் சீர்திருத்த ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர், நிலஅளவை மற்றும் நிலவரிதிட்ட இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெற்று அதை மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக 20.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென, நிலச் சீர்திருத்த ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

ii. மேலும், மனுதாரர் 23.10.2023 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும், 25.06.2026 அன்று தான் இது குறித்து, நிலஅளவை மற்றும் நிலவரிதிட்ட இயக்குநர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டு தகவல் கோரப்பட்டுள்ளது என்பதையும் ஆணையம் பதிவு செய்கிறது. ஆகவே, கடந்த இரண்டரை ஆண்டுகளாக மனுதாரருக்கு தகவல் வழங்க நடவடிக்கை எதையும் எடுக்காத நிலச் சீர்திருத்த ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் யார் என்பதை மேல்முறையீட்டு அலுவலர் / சென்னை, சேப்பாக்கம் நிலச் சீர்திருத்த அலுவலக உதவி ஆணையர் கண்டறிந்து அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று 20.08.2026 அன்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.

iii. மனுதாரர் 24.11.2023 நாளிட்டு அனுப்பிய முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காத அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் / சென்னை, சேப்பாக்கம் நிலச் சீர்திருத்த அலுவலக உதவி ஆணையர் யார் என்பதை என்பதை தற்போதைய சென்னை, சேப்பாக்கம் நிலச் சீர்திருத்த அலுவலக உதவி ஆணையர் கண்டறிந்து அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1)-ன். கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று 20.08.2026 அன்று தற்போதைய நிலச் சீர்திருத்த ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.

ஒம்/- (அபய் குமார் சிங்)
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண் வழக்கு எண் SA 3567-E-2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்,
நிலச் சீர்திருத்த துறை,,
சேப்பாக்கம், சென்னை - 600 005

மேல்முறையீட்டு அலுவர்,
உதவி ஆணையர்,
நிலச் சீர்திருத்த துறை,
சேப்பாக்கம், சென்னை - 600 005

பொதுத் தகவல் அலுவலர்,
நில அளவை மற்றும்
நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலகம்.
சேப்பாக்கம், சென்னை - 600 005

திரு து.இன்பமணி,
51, திருவள்ளுவர் தெரு,
காந்தி சாலை, வேளச்சேரி,
சென்னை - 600 042

Copy to file
CR/PA